**R4794**

## THE SONG OF THE VINEYARD
## திராட்சைத் தோட்டத்தின் பாடல்

ஏசாயா 5: 1-12

"இப்பொழுது நான் என் நேசரிடத்தில் அவருடைய திராட்சைத் தோட்டத்தைக் குறித்து என் நேசருக்கேற்ற ஒரு பாட்டை பாடுவேன்."

இந்த பாடத்தில், கடைசிவரை, தெய்வீக ஊக்கமளிக்கும் திறவுகோலை நாம் பெற்றிருக்கிறோம். ஏனெனில் தீர்க்கதரிசியே உண்மையாக விவரிக்கிறது போல நமது மாபெரும் போதகர் இந்த வார்த்தைகளை யூத தேசத்திற்கு ஒப்பிட்டு கூறுகிறார். தீர்க்கதரிசி பாடல் என்று கூறுகிறதை ஒரு உவமை அல்லது கதை என்று நாம் சரியானபடி அழைக்கலாம். தேவன் தமது திராட்சைத் தோட்டத்தில் இஸ்ரேல் தேசத்தை நட்டு வைத்தாக குறிப்பிடுகிறார். அவர் கற்களை பொறுக்கினார். அதாவது கஷ்டங்களை நீக்கினார்; அதிலே நற்குல திராட்சை செடியை நட்டு வைத்தார். அதாவது விலையுயர்ந்த வாக்குத்தத்தங்களாகிய மேசியாவின் ராஜ்யம், இஸ்ரேல் மற்றும் பூமியின் சகல ஜாதிகளின் ஆசீர்வாதங்களை கொடுத்திருந்தார். அதற்கு அவர் காவற்கோபுரமாகிய தீர்க்கதரிசனங்களையும், வேலியாகிய நியாயப்பிராணத்தையும் தீர்க்கதரிசிகளையும் கொடுத்து பரிசுத்த ஜாதிக்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தார். இப்படி நல்ல சாதகமாக அமைந்துள்ள திராட்சைத் தோட்டத்திலிருந்து நல்ல பழங்களை அவர் எதிர்பார்த்தது சரியானதாக இருந்தது. ஆனால் பலனோ திருப்தியற்றதாக இருந்தது. ஆனால் கனிகள் அவரது வாக்குத்தத்தங்களுக்கு இசைவானதாக இல்லை. மாறாக சிறிய, கசப்பான பழங்களை தந்தது.

இந்த நிலைமை இயேசுவின் காலம் வரை நிலவியது. அவ்வப்போது துன்பங்கள் தேசத்திற்கு கர்த்தரால் அனுமதிக்கப்பட்டு வந்தாலும், மீறுதல்கள் சரி செய்யப்பட்டு தேசமானது பாதுகாக்கப்பட்டது. அதன் காவற்கோபுரமும் தெய்வீக பாதுகாப்பு மற்றும் வழிகாட்டுதல் ஆகிய சுவர்களும் எப்பொழுதும் பாதுகாக்கப்பட்டன. யோவான் ஸ்நானன் தான் கடைசி தீர்க்கதரிசி. அவரது காலம் வரை தீர்க்கதரிசனங்களில் குறிப்பிடப்பட்டிருந்த காரியங்களை கர்த்தர் நிறைவேற்றி வந்தார். வேலிகள் உடைத்து போடப்பட்டன. அது பாழாக்கப்பட்டது. அது கவனிக்கப்படாதிருந்தது. புறஜாதி தேசங்களாகிய காட்டு மிருங்கள் இந்த திராட்சைத் தோட்டத்தை நாசமாக்கிப் போட்டன. இந்த பதினெட்டு நூற்றாண்டுகளாக தெய்வீக ஆசீர்வாதம், ஆறுதல், ஊக்கம் மற்றும் பலன்களாகிய மழை தேவனால் கொடுக்கப்படாதிருந்தன.

### நல்ல வகைப் பழம்

கர்த்தர் திராட்சைத் தோட்டத்திலிருந்து எதிர்பார்த்த நல்ல வகையான பழம் எது? ஏன் அவர் அதைக் காணவில்லை? இதை நமக்கு தீர்க்கதரிசனத்தில் கூறுகிறார். "சேனைகளின் கர்த்தருடைய திராட்சைத் தோட்டம் இஸ்ரயேலின் வம்சமே; அவருடைய மனமகிழ்ச்சியின் நாற்று யூதாவின் மனுஷரே, அவர் நியாயத்துக்குக் காத்திருந்தார், இதே கொடுமை; "நீதிக்கு காத்திருந்தார், இதோ, முறைப்பாடு." வேறு வார்த்தைகளில் சொல்வோமேயானால், இஸ்ரயேலர்கள் தேவனுடைய ஜனங்களாக இருந்து அவரது ஆசீர்வாதமான சலுகையை பெறுவதும், அவரது தெய்வீக கிருபையை பெறுவதும், அவர்கள் தெய்வீக பிரமாணத்தை உண்மையாக கடைபிடிப்பதை பொறுத்தே இருக்கிறது என்பதே இஸ்ரயேலருடனான தேவனுடைய உடன்படிக்கையாக இருக்கிறது. பிரமாணங்களை அவர்கள் சரியானபடி கடைபிடிக்கமாட்டார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். அவர் நல்ல திராட்சைப் பழங்களை பெறமாட்டார் என்பதை அறிந்திருந்தார். அவர் பெற்ற பழங்களை காட்டிலும் மேலானவைகளைப் பெற அவருக்கு உரிமை இருந்தது. அவர்கள் மாம்சீக பலவீனம் உடையவர்களாக இருந்தாலும் இருதய முயற்சியை எதிர்பார்த்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக சர்வ வல்லவரை நேசிப்பது, தன்னைத்தான் நேசிப்பது போல பிறனை நேசிப்பது, சுயநலமற்ற அன்பு ஆகியவையே பிரமாணத்தின் தேவையாக இருந்தது. இந்த பிரமாணத்தை ஆவியின்படியாவது, முடிந்த அளவுக்கு மாம்சீக திராணிக்குதக்கதாக கடைபிடிப்பதே தேவையாக இருந்தது. பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு இஸ்ரலேயரிடம் அவர் தோன்றியது போது, இப்படிப்பட்ட கனிகளை அவர்கள் கொடுத்திருந்தால், தெய்வீக வாக்குத்தத்தத்தின்படி அப்போதே ஆவிக்குரிய ராஜ்யத்தை அமைக்க தயாராயிருந்திருப்பார்கள். ஆனால் அவர்கள் தயாராயில்லாதிருந்ததால் அவர்களது அனைத்து முறைமைகளையும் உடைக்க வழிநடத்தியது. தேவனிடத்திலும் பிறனிடத்திலும் போதுமான அன்பு உடையவர்களாக அவர்கள் இல்லை.

இஸ்ரயேலர் மற்ற உலகத்தினரைக் காட்டிலும் மிகவும் சீரழிந்த நிலையில் இருந்தனர் என்று நாம் புரிந்துக் கொள்ளக்கூடாது. அதற்கு மாறாக, இது உண்மை என்று நாம் நம்புகிறோம். மற்ற தேசங்கள் எதுவும் விசேஷித்தவிதமாக நடப்பட்டு, வேலியடைக்கப்பட்டு, தண்ணீர் பாய்ச்சப்பட்டு, விசேஷித்த விதமாக பாதுகாக்கப்படவில்லை. எங்கே அதிகமாக கொடுக்கப்பட்டதோ அங்கே அதிகமாக எதிர்பார்க்கப்பட்டது. அதிகமானவர்கள் காணப்படாத போது உண்மையுள்ள சிலர் சேர்க்கப்பட்டு திராட்சைத் தோட்டமானது தற்காலிகமாக கைவிடப்பட்டது. மேசியாவின் ராஜ்யத்தின் மகிமை மற்றும் பரலோக வல்லமையில் அதே திராட்சைத் தோட்டம் இன்னும் அதிக சாதகமான சூழ்நிலைகளில் புதுப்பிக்கப்படும் என்பதை வேத வாக்கியத்திலிருந்து அறிந்து கொள்ளுவதில் நாம் உண்மையிலேயே சந்தோஷம் அடைகிறோம். ஆனால் அது இன்னும் ஒழுங்கின்மையில் இருக்கிறது.

நமது தலைப்பு வசனத்தை தொடர்ந்து வருகிற வசனங்கள் இஸ்ரயேலரின் மனநிலை ஒருவருக்கெதிராக ஒருவர் இருக்கிறதைப் பற்றி குறையாக கூறுகின்றன. இதன் பலனால் சிலர் பெரும் பணக்காரர்களாகவும் சிலர் பரம ஏழையாகவும் ஆயினர். இந்த தீர்க்கதரிசனம் மாபெரும் போதகரின் வார்த்தைகளை ஞாபகப்படுத்துகிறது. “மாயக்கரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ.... விதவைகளின் வீடுகளை பட்சித்துப் போடுகிறீர்கள்.” ஏழைகளின் சொத்துக்களை சில சமயங்களில் சட்டத்தின் மறைவில் எடுத்துக்கொள்கிறீர்கள். நீங்கள் தன்னைத்தான் நேசிப்பது போல பிறரை நேசிப்பதோ, ஏழைகளுக்கும் விதவைகளுக்கும். அநாதைகளுக்கும் உதவுவதோ அனைவருடன் பெருந்தன்மையுடன் இருப்பதோ இல்லை. சுயநலத்தின் பாவம் மற்றும் பேராசை கர்த்தரின் ஆவியும் அனைவரிடமும் நல்லெண்ணமும் குறைவுபடுவதை குறிக்கிறது. நமது கர்த்தரின் நாட்களில் பெரும்பாலான யூதர்கள் இப்படிப்பட்ட சுயநலவாதிகளாக இருந்தனர். ஆகையால் அவர்கள் கர்த்தர் அமைக்கிற ஆவிக்குரிய மணவாட்டி வகுப்பாருக்கு தகுதியற்றவர்களாக இருந்தனர். “மீந்திருக்கிறவர்கள்” என்று தீர்க்கதரிசி குறிப்பிடப்பட்டது போல சிலர் மட்டுமே தகுதியுள்ளவர்களாக இருந்தார்கள்.

சுயநலத்தை எப்படி தண்டிப்பார் என்பது குறித்து கர்த்தர் குறிப்பிட்டார். பெரிய சொத்துக்களின் மேல் அழிவு வரும். பூமியானது உழைப்புக்கேற்ற ஊதியம் தராது. இப்படியாக சுயநலமானது பூமிக்குரிய கண்டனங்களையும் பெறும். அதே சமயத்தில் ஆவிக்குரிய சலுகையையும் இழக்கும்.

### ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு கோரிக்கை

தேவன் மாம்சீக இஸ்ரயேலரை கையாண்ட விதம் தெய்வீக அரசாங்கம் மற்றும் தேவைகளின் கொள்கைகளை மட்டும் குறிப்பிடாமல், வேத வாக்கியங்கள் காண்பிப்பது போல மாம்சீக இஸ்ரயேலரின் ஊழியத்தின் தேவையையும் குறிப்பிடுகிறது. மேலும் அவர்கள் ஆவிக்குரிய இஸ்ரேயலரை நிழலாக காண்பிக்கிறார்கள். சுபாவ இஸ்ரயேலர், இயேசுவின் முதலாம் வருகையில், “மீதியாய் இருப்பவர்களைத்” தவிர அவரை ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. அதே போல “கிறிஸ்தவ மண்டலம்” என்று அழைக்கப்படுகிற ஆவிக்குரிய இஸ்ரயேலர் மாபெரும் மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போது அவரை ஏற்றுக்கொள்ள தயாராயிருக்கமாட்டார்கள். சபையை ஸ்தாபிக்கும் போது சகல சிரமங்களையும் நீக்கி அவர் எடுத்துக்கொண்ட அக்கறையை கவனியுங்கள். மகா மேன்மையும் அருமையுமான பரத்துக்குரிய ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களை அவரது திராட்சைத் தோட்டமாகிய சபையை சுற்றி வைத்ததை கவனியுங்கள். அது பிதாவானவரின் வலது கையினால் நடப்பட்டதை கவனியுங்கள். அப்போஸ்தலர்கள் மூலமாக கிருபையும் சத்தியமுமாகிய காவற்கோபுரத்தை கொடுத்ததை கவனியுங்கள். பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதத்தை கவனியுங்கள்.

யூத யுக முடிவில் மாம்சீக இஸ்ரயேலருக்கு அறுவடை காலம் வந்தது போல, இந்த யுக முடிவில் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு அறுவடை காலம் வருகிறது. அங்கே இருந்ததைப் போல இங்கேயும் “மீதியாய் இருப்பவர்கள்” மாத்திரமே ராஜ்யத்திற்கு தகுதியாக காணப்படுவார்கள். மாபெரும் கிறிஸ்தவ மண்டலம் தகுதியற்றதாக காணப்படும். ஏன்? ஏனெனில் கர்த்தரின் ஆவி, தயவு, சாந்தம் மற்றும் அன்பின் ஆவிக்கு பதிலாக, உலகம் மற்றும் சுயநலத்தின் ஆவியே வியாபித்திருக்கிறது. சிலரிடம் மட்டுமே தேவன் முதலாவதாக இருக்கிறார். சிலரிடம் மட்டுமே தெய்வீக சித்தத்தை செய்யக்கூடிய முழுமையான அர்ப்பணத்தின் ஆவி இருக்கிறது. சிலரிடம் மட்டுமே சகோதர அன்பும் ஒருவருக்கொருவர் ஜீவனை கொடுக்கக்கூடிய விருப்பமும் இருக்கிறது. (யோவான் 15:13) சிலரிடம் மட்டுமே வியாபாரத்தில் கூட நேர்மையும் நியாயமும் இருக்கிறது. தற்காலத்தில் சுயநலம் மட்டுமே குவிந்து கிடக்கிறது. அதன் பலன் திருப்தியற்றதாக இருப்பதாக நிச்சயிக்கிறோம். “யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலம்மட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் இருக்கும்.” (தானியேல் 12:1)

மேலும் தீர்க்கதரிசி காண்பிப்பது போல, ஐசுவரியத்தை சேர்ப்பது ஐசுவரியவான்களுக்கு தீமையை விளைவிப்பதாக இருக்கிறது. அது சோம்பல், இசை, மது மற்றும் தெய்வீக அலட்சியத்தை கொடுக்கிறது. இப்பொழுது “மீதியாய் இருப்பவர்கள்” “தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை” நிறைவு செய்ய போதுமானவர்களாக இருப்பார்கள். மகிமையின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். விரைவில் பூமியின் சகல வம்சங்களும் நீண்ட காலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களை “ஆபத்துக்காலத்திற்கு” பிறகு பெற்றுக்கொள்ள ஆரம்பிப்பார்கள். “ஆபத்துக்காலம்” கர்த்தரால் உலகத்தை பணிய வைக்கவும் மனுக்குலமானது ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை சரியானபடி பெற்றுக்கொள்ள தயார்படுத்தவும் பயன்படுத்தப்படும்.